# பெரியாழ்வார் திருமொழி 4-4
## நாவகாரியம்

(முக்கரணங்களாலும் திருக்கோட்டியூரை அனுபவிப்பவரைக் கொண்டாடியும், அவ்வாறு அனுபவியாத அவைஷ்ணவரை இழித்தும் கூறுதல்)

360 * நாவகாரியம் சொல்லிலாதவர் * நாள்தொறும்
விருந்தோம்புவார் *
தேவகாரியம் செய்து * வேதம் பயின்று வாழ் திருக்கோட்டியூர் **
மூவர் காரியமும் திருத்தும் * முதல்வனைச் சிந்தியாத * அப்
பாவகாரிகளைப் படைத்தவன் * எங்ஙனம் படைத்தான் கொலோ (1)

361 குற்றமின்றிக் குணம் பெருக்கிக் * குருக்களுக்கு அனுகூலராய் *
செற்றமொன்றுமிலாத * வண்கையினார்கள் வாழ்
திருக்கோட்டியூர் **
துற்றியேழுலகுண்ட * தூமணிவண்ணன் தன்னைத் தொழாதவர் *
பெற்ற தாயர் வயிற்றினைப் * பெருநோய் செய்வான்
பிறந்தார்களே (2)

362 வண்ண நல்மணியும் * மரகதமும் அழுத்தி * நிழலெழும்
திண்ணை சூழ் * திருக்கோட்டியூர்த் திருமாலவன்
திருநாமங்கள் **
எண்ணக் கண்ட விரல்களால் * இறைப் பொழுதும்
எண்ணகிலாது போய் *
உண்ணக் கண்ட தம் ஊத்தை வாய்க்குக் *
கவளமுந்துகின்றார்களே (3)

363 உரகமெல்லணையான் கையில் * உறை சங்கம் போல்
மடவன்னங்கள் *
நிரை கணம் பரந்தேறும் * செங்கமல வயல் திருக்கோட்டியூர் **
நரகநாசனை நாவிற் கொண்டழையாத * மானிட சாதியர் *
பருகு நீரும் உடுக்குங் கூறையும் * பாவம் செய்தன
தாங்கொலோ (4)

364 ஆமையின் முதுகத்திடைக்குதி கொண்டு * தூமலர் சாடிப் போய் *
தீமை செய்து இளவாளைகள் * விளையாடு நீர்த்
திருக்கோட்டியூர் **
நேமி சேர் தடங்கையினானை * நினைப்பிலா வலி நெஞ்சுடை *
பூமி பாரங்கள் உண்ணும் சோற்றினை வாங்கிப் * புல்லைத்
திணிமினே (5)

365 பூதம் ஐந்தொடு வேள்வி ஐந்து * புலன்கள் ஐந்து பொறிகளால் *
ஏதம் ஒன்றுமிலாத * வண்கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர் **
நாதனை நரசிங்கனை * நவின்றேத்துவார்கள் உழக்கிய *
பாத தூளி படுதலால் * இவ்வுலகம் பாக்கியம் செய்ததே (6)

366 குருந்தம் ஒன்றொசித்தானொடும் சென்று * கூடியாடி விழாச் செய்து *
திருந்து நான்மறையோர் இராப் பகல் * ஏத்தி வாழ் திருக்கோட்டியூர் **
கருந்தட முகில் வண்ணனைக் * கடைக் கொண்டு கைதொழும் பத்தர்கள் *
இருந்த ஊரில் இருக்கும் மானிடர் * எத்தவங்கள் செய்தார் கொலோ (7)

367 நளிர்ந்த சீலன் நயாசலன் * அபிமான துங்கனை நாள் தொறும் *
தெளிந்த செல்வனைச் சேவகங்கொண்ட * செங்கண்மால் திருக்கோட்டியூர் **
குளிர்ந்துறைகின்ற கோவிந்தன் * குணம் பாடுவார் உள்ள நாட்டினுள் *
விளைந்த தானியமும் இராக்கதர் * மீது கொள்ளகிலார்களே (8)

368 கொம்பினார் பொழில்வாய் * குயிலினம் கோவிந்தன் குணம் பாடு சீர் *
செம்பொனார் மதிள் சூழ் * செழுங்கழனியுடைத் திருக்கோட்டியூர் **
நம்பனை நரசிங்கனை * நவின்றேத்துவார்களைக் கண்டக்கால் *
எம்பிரான் தன சின்னங்கள் * இவரிவரென்று ஆசைகள் தீர்வனே (9)

369 காசின் வாய்க் கரம் விற்கிலும் * கரவாது மாற்றிலி சோறிட்டு *
தேசவார்த்தை படைக்கும் * வண்கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர் **
கேசவா புருடோத்தமா * கிளர் சோதியாய் குறளா என்று *
பேசுவார் அடியார்கள் * எந்தம்மை விற்கவும் பெறுவார்களே (10)

370 * சீதநீர் புடைசூழ் * செழுங்கழனியுடைத் திருக்கோட்டியூர் *
ஆதியான் அடியாரையும் * அடிமையின்றித் திரிவாரையும் **
கோதில் பட்டர்பிரான் * குளிர் புதுவைமன் விட்டுசித்தன் சொல் *
ஏதமின்றி உரைப்பவர் * இருடீகேசனுக்காளரே (11)